**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 191/2015** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சங்கர் | **வயது** | : | 56 |
| **த.பெ** | : | முனுசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | இரும்புலி | **தொழில்** | : | விவசாயம் |

**<u>19.11.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)2005 ல் என் தந்தை முனுசாமி அவர்கள் எனக்கும், என் தம்பி சேட்டுக்கும் சொத்து பாகபிரிவினை செய்துவைத்த பிறகு நான் தான் அனுபவத்தில் உள்ளேனா என்றால் என் தாத்தா சின்னதுரை கவுண்டர் உயில் மூலம் சர்வே நெம்பர் 142 சொத்தை எனக்கும் என் தம்பி சேட்டுக்கும் எழுதிவைத்தார். என் பெயரில் தான் சர்வீஸ் கனெக்சன் வாங்கப்பட்டதா என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேனா என்றால் சரிதான். மேற்படி பம்புசெட்டிற்கு கொடுக்கப்பட்ட சர்வீஸ் கனெக்சனுக்கும், என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 அடி இருக்கும். நான் தாவா சொத்தில் 10 வருடமாக வீடு கட்டி அனுபவித்து வருகிறேன். மேற்படி வீட்டிற்கு தனியாக சர்வீஸ் கனெக்சன் வாங்கவில்லை என்றால் வாங்கியிருக்கிறேன்.

2)இந்த வழக்கில் வீட்டிற்காக சர்வீஸ் கனெக்சன் தனியாக வாங்கி அதற்கு செலுத்திய மின்கட்டண ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடத்தில் பம்புசெட்டிற்கான சர்வீஸ் கனெக்சனை மின்சாரதுறையை சேர்ந்தவர்கள் துண்டித்தார்கள் என்றால் 2014 ல் துண்டித்தார்கள். மேற்படி மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது நான் அங்குதான் இருந்தேனா என்றால் சம்பவம் 2 மணிக்கு மேல் நடைபெற்றது நான் 3 மணிக்கு வந்தேன். சம்பவத்தன்று என்னிடம் எதாவது கூறினார்களா என்றால் இல்லை, 2 நாட்கள் கழித்து என்னை இபி ஆபிஸ் அழைத்துசென்று கையெழுத்து வாங்கினார்கள். நான் விவசாயத்திற்கு இலவசமாக கொடுக்கப்படும் மின்சாரத்தை வீட்டிற்கு திருட்டுதனமாக உபயோகித்ததால் அரசுக்கு நஷ்டம் எற்பட்டது என்று என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் நான் போடமாட்டேன் என்று கூறினேன் போலிசில் கூறிவிடுவேன் என்று மிரட்டி கையெழுத்து போடசொன்னார்கள்.

3)அரசுக்கு எவ்வளவு நஷ்டம் எற்பட்டது என்று என்னிடம் கூறினார்கள் என்றால் வாய்மொழியாக 92000 என்று கூறினார்கள், மேலும் ரெக்கார்டில் 48000 என்று இருந்தது. மகசர் தயாரித்து என்னிடம் நகல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னிடம் காட்டபடும் மகசரில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது தான். மேற்படி கையெழுத்து **பி.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மகசரில் குறிப்பிட்டுள்ள நஷடஈடு தொகையை 3 நாட்களில்

கட்டிவிடுகிறேன் என்று கூறினேனா என்றால் இல்லை. நான் 3 நாட்களுக்குள் பணம் கட்டாததால் மின்சாரதுறையினர் கண்ணமங்கலம் காவல்நிலையத்தில் என்மீது புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி புகாரை அடிப்படையாக வைத்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது ஆகையால் நான் மாவட்ட நீதிமன்றம், திருவண்ணாமலையில் முன்ஜாமீன் மனு தாக்கல் செய்து முன்ஜாமீன் பெற்றேன் என்றால் சரிதான்.

4)என்னுடைய முதன்மை விசாரணையில் 14.06.2014 அன்று 1ம் பிரதிவாதி அலுவலகத்தை சேர்ந்த நபர்கள் மின்இணைப்பை துண்டித்து மின்மோட்டாரை எடுத்துசென்றுவிட்டார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் என் அனுமதி இல்லாமல் துண்டித்து சென்றுவிட்டார்கள். நானே மின்மோட்டாரை துண்டித்து எடுத்துகொண்டு மின்சாரதுறையினர் மீது அவர்கள் மின்இணைப்பை துண்டித்து மின்மோட்டாரை எடத்துசென்றுவிட்டார்கள் என்று கண்ணமங்கலம் போலிஸ் ஸ்டேசன் மற்றும் மாவட்ட காவல்கண்பாணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்திருந்தேன் என்றால் நான் போளூர் ஒன்றிய விவசாய துணைதலைவராக இருந்துவருகிறேன் அதில் நான் கேள்வி கேட்பதால் என்மீது உள்ள காழ்ப்புணர்ச்சியால் மின்சாரதுறையினர் என் எந்தவித முன்அறிவிப்பும் கொடுக்காமல் மின்சாரத்தை துண்டித்து மின்மோட்டாரை எடுத்துசென்றுவிட்டார்கள்.

5)பிரதிவாதிகள் எனக்கு நான் மின்சாரத்தை திருடியதால் ரூ-25000 நஷ்டஈடு கேட்டு நோட்டீஸ் அனுப்பினார்களா என்றால் இல்லை. நான் 08.09.2014 ல் என் வழக்கறிஞர் மூலம் மின்சாரதுறையினருக்கு நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் எனக்கு பதில்அறிவிப்பு 15.09.2014 அனுப்பினார்கள் என்றால் நான் பெறவில்லை. எனக்கு நஷ்டஈடு பணத்தை செலுத்துவதற்காக போதிய காலஅவகாசம் அளித்தபோதும் நான் பணத்தை செலுத்தாதல் தான் மின்சாரதுறையினர் என் மின்சாரத்தை துண்டித்தார்கள் என்றால் எனக்கு காலஅவசாசம் கொடுக்கவில்லை. என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.11.20 13:26:31 +0530

District Munsif,
Polur.